


புதுக்கோட்டை மேயர் திலகவதி செந்தில் கணவரும், புதுக்கோட்டை மாநகர செயலாளருமான ஆ.செந்தில் அவர்களின் உடலுக்கு கழக முதன்மை செயலாளரும், நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சருமான கே.என்.நேரு நேரில் சென்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார். உடன் அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன், பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப் பித்தன், எம்.எம்.அப்துல்லா எம்.பி, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, டி.கே.ஜி. நீலமேகம் எம்.எல்.ஏ, த.சந்திரசேகரன், அரு வீரமணி, துணை மேயர் எம். லியாகத் அலி மற்றும் பலர் உள்ளனர்.

### இன்று (27 ஆம் தேதி) திருப்பத்தூரில் நடைபெறுகிறது!

# சிவகங்கை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!



சிவகங்கை. டிசம்பர் 27 .

சிவகங்கை மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் இன்று திருப்பத்தூரில் நடைபெறுவதாக அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும் ,கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

இன்று (27.12.2024 - வெள்ளிக்கிழமை) காலை 10 மணி அளவில் சிவகங்கை மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம் திருப்பத்தூர் கண்டரமாணிக்கம் சாலையில் அமைந்துள்ள பிரபா செல்வி திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர்அ. கணேசன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் .

**பொருள் :**

பூத் கமிட்டி பி.எல்.சி. அமைப்பது தொடர்பாக ,

கழக வளர்ச்சி பணிகள்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

### போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை பெற

# புதிய கல்லூரி மாணவர்கள் இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்!

## ஜன.31 கடைசி நாள் என அரசு அறிவிப்பு!

சென்னை, டிச. 27 -

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களின் கல்வி மேம்பாட்டிற்காக போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம், ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம், சுகாதாரமற்ற தொழில் புரிவோர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகை திட்டம் (சாதி மற்றும் வருமான வரம்பு ஏதுமின்றி) உள்ளிட்ட பல கல்வி உதவித் தொகை திட்டங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மூலம் வருடந்தோறும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2024-2025ஆம் கல்வி யாண்டிற்கு கல்லூரிகளுக்கான கல்வி உதவித் தொகை திட்டங்களுக் கான இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதில் ஏற்கனவே கல்லூரியில் சேர்க்கை பெற்று பயின்று வரும் புதுப்பித்தல் (Renewal) மாணாக்கர்கள் கல்வி உதவித் தொகைக்கு புதிதாக விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை. புதுப்பித் தல் மாணாக்கர்கள் கல்லூரிகளில் பயில்வதை சம்மந்தப்பட்ட கல்லூரிகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

2024-2025ஆம் கல்வி யாண்டில் கல்லூரியில் முதலாமாண்டு சேர்க்கை பெற்ற மாணாக்கர்கள் மற்றும் சென்ற வருடத்தில் கல்வி உதவித் தொகைக்கு விண்ணப்பிக்க தவறிய மாணாக்கர்கள் தற்போது தாங்கள் பயிலும் கல்லூரியில் கல்வி உதவித் தொகைக்கென உள்ள ஒருங்கிணைப்பு அலுவலரை (Nodal Officer) அணுகி UMIS (https://umis.tn.gov.in/ ) என்ற இணையதளத்தில் கல்லூரி மூலம் கல்வி உதவித் தொகைக்கு விண்ணப்பிக்கலாம்.

போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க விரும்பும் புதிய கல்லூரி மாணாக்கர்கள் கீழ்காணும் ஆவணங்களைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

1. வருமானச் சான்றிதழ் (பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும்).

2. சாதிச் சான்றிதழ் (வருமானச் சான்று மற்றும் சாதிச் சான்று ஆகியவை இணைய சான்றுகளாக இருத்தல் அவசியம். இணைய சான்றுகளை பெற அருகிலுள்ள இ சேவை மையங்களில் விண்ணப்பிக்க வேண்டும்).

3. மாணாக்கரின் ஆதார் எண்ணுடன் மாணாக்கர்களின் வங்கிக் கணக்கு எண் இணைக்கப்பட்டிருக்க (seeding) வேண்டும். அவ்வங்கிக் கணக்கு செயல்பாட்டில் (Active) உள்ள கணக்காக இருக்க வேண்டும்.

இவ்விவரங்களை மாணாக்கர்களுக்கு தெரிவித்து ஆதிதிராவிடர், கிறித்துவ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர்களின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்குமாறு கல்லூரி முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கல்வி உதவித் தொகை தொடர்பான சந்தேகங்களுக்கு கட்டணமில்லா சேவை எண் 18005997638 அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ளலாம்.

விண்ணப்பம் சமர்ப்பிக்க கடைசி நாள் 31.01.2025.

### சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில்

# திருவாரூரில் கிறிஸ்துமஸ் விழா!

## பூண்டி.கே.கலைவாணன் பங்கேற்று இனிப்புகள் வழங்கினார்!

திருவாரூர்,டிச27 -

திருவாரூரில் திமுக சிறுபான்மை நல உரிமைப்பிரிவு அணி சார்பில் கிறிஸ்த்துமஸ் விழா எழுச்சியோடு நடைபெற்றது . மாவட்ட சிறுபான்மை நல உரிமைப்பிரிவு நிர்வாகிகள் சார்பில் நடைபெற்ற இந்த விழாவில் மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.பங்கேற்று கிறிஸ்தவ மக்களுக்கு வாழ்த்துக்களை பரிமாறியதோடு இனிப்புக்களை வழங்கினார். மாவட்ட அமைப்பாளர் எம்.ஐ. தாஜுதீன், துணை தலைவர் செபேஷ் ரோலி, நாகங்குடி அமீன் மற்றும் நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.

திருவாரூர் புனித ஆர்.சி.பாத்திமா தேவாலயம் மக்கள் மன்றத்தில் திருவாரூர் மாவட்ட திமுக சிறுபான்மை நல உரிமைப்பிரிவு சார்பில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் கிறிஸ்தவ முறைப்படி சிறப்பு திருப்பலி நடைபெற்றது. ஏராளமான கிறிஸ்தவ மக்கள் பங்கேற்ற இந்த திருப்பலியோடு, திருவாரூர் மாவட்ட திமுக சிறுபான்மை நல உரிமைப்பிரிவு சார்பில் பிரமாண்ட கேக் தயாரிக்கப்பட்டு, அதனை மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. மற்றும் பங்குத்தந்தை ஜெரால்ட் ஆகியோர் கேக்கினை வெட்டி வாழ்த்துக்களை பரிமாறிக்கொண்டனர்.




சிவகங்கை மாவட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு தொடக்க விழா இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாநில விவசாய சங்க தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.குணசேகரன் கட்சி கொடி ஏற்றி வைத்து சிறப்புரை ஆற்றினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் கோபால், வழக்கறிஞர் மருது நகர் செயலாளர் சகாயம் உட்பட மாவட்ட நகர் நிர்வாகிகள், மாதர் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

### துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதிஸ்டாலின்

# பிறந்தநாளை முன்னிட்டு வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டம் முழுவதும் தொடர் பொதுக்கூட்டங்கள் 2வது பட்டியல்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



| நாள் | பேச்சாளர்கள் | அமைப்பு |
|---|---|---|
| 28.12.2024 | 1.பவானி கண்ணன் தலைமை கழக பேச்சாளர் | கணியம்பாடி தெற்கு ஒன்றியம் |
| 29.12.2024 | 1.R.S.பாரதி கழக அமைப்பு செயலாளர் | குடியாத்தம் நகரம் |
| | 2. பொன்னேரி சிவா தலைமை கழக பேச்சாளர் | பேர்ணாம்பட்டு தெற்கு ஒன்றியம் |
| | 3. பசும்பொன் ரவிச்சந்திரன் தலைமை கழக பேச்சாளர் | பள்ளிகொண்டா பேரூர் |
| 30.12.2024 | 1.சேலம் சுஜாதா தலைமை கழக பேச்சாளர் | அல்லாபுரம் பகுதி |
| | 2. பொன்னேரி சிவா தலைமை கழக பேச்சாளர் | அணைக்கட்டு மத்திய ஒன்றியம் |
| | 3.நாகை நாகராஜன் தலைமை கழக பேச்சாளர் | அணைக்கட்டு கிழக்கு ஒன்றியம் |
| | 4.ஈரோடு இறைவன் தலைமை கழக பேச்சாளர் | கீ.வ.குப்பம் கிழக்கு ஒன்றியம் |
| 31.12.2024 | 1.சேலம் கோவிந்தன் தலைமை கழக பேச்சாளர் | சேண்பாக்கம் பகுதி |
| | 2.எழும்பூர் கோபி தலைமை கழக பேச்சாளர் | திருவலம் பேரூர் |
| | 3.முரசொலி மூர்த்தி தலைமை கழக பேச்சாளர் | காந்திநகர் பகுதி |

நடைபெற உள்ள பொதுக்கூட்டங்களில் மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில அணிகளின் துணை செயலாளர்கள், மாவட்டதிற்கு உட்பட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், வட்ட, வார்டு மற்றும் ஊர்கிளை நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக இந்நாள், முன்னாள் நிர்வாகிகள் திரளாக கலந்துகொண்டு சிறப்பித்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எனவே அட்டவணைப்படி அறிவிக்கப்படும் தேதிகளில் அந்தந்த அமைப்பிற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் ஏற்பாடுகளை செய்து கூட்டம் சிறப்பாக நடைபெற தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ.**
செயலாளர்
வேலூர் மாவட்ட தி.மு.க.

### சிவகங்கை மாவட்டம் – திருக்கோட்டியூரில்

# சுற்றுச்சூழல் அணி சார்பில் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார்!

சிவகங்கை, டிச. 27 -

சிவகங்கை மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் அமைப்பாளர் வல்லபாய் ஏற்பாட்டின் பேரில் துணை முதலமைச்சரும், கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்டம் முழுவதும் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடும் பணி திருக்கோட்டியூரில் நடைபெற்றது.

மாவட்டக் கழக செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர். பெரியகருப்பன் தலைமையேற்று மரக்கன்றுகள் நடும் பணியினை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாவட்ட துணை செயலாளர் த.சேங்கை மாறன் மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ. கணேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் ஒன்றிய குழு தலைவர் எஸ். சண்முக வடிவேல், மாவட்ட சுற்றுச்சூழல்அணி தலைவர் எம்.கார் கண்ணன், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், திருப்பத்தூர் பேரூராட்சி மன்ற தலைவர் கோகிலா ராணி நாராயணன் ,மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி காளிமுத்து மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், மாவட்ட விவசாய்அணி அமைப்பாளர் எஸ் .எஸ். அருணாச்சலம், நிர்வாகிகள் வசந்த் ,

பில்லப்பன் மாணிக்கம், கார்த்தி, பாண்டி, ரமேஷ், முத்துச்செல்வம், செல்லத்துரை, ஊராட்சி மன்ற தலைவர் செல்வராஜ், சுரேஷ், மாதவன், முத்தமுகு ,செல்வராஜ் , பழனியப்பன் வரதராஜன், மாதவன், கணேசன், முத்துகுமார் , புதூர் கண்ணன் முத்துப்பாண்டி, ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார், ஒன்றிய பொருளாளர் ஏ.எம்.கண்ணன், அயலக அணி சன்சீமான் சுப்பையா, தமிழ்நம்பி, சோமசுந்தரம் மாவட்ட கவுன்சிலர் ஏ.டி.என்.ரவி உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கடலாடி அ. பிரணவநாதன்**
**டிசம்பர் 27 (2010)**



**இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஒன்றியக் கழகச் செயலாளராக இருபது ஆண்டுகள் பணியாற்றியவர்.**

**ஒரு முறை மாவட்ட துணைச் செயலாளராகவும், இரண்டு முறை தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**கடலாடி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றிபெற்று அந்தத் தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**